உ

முருகன் துணை.



தொட்டப்பநாயக்கனூர் ஜமீன் செட்டியபட்டி வித்வான்

**T. S. இராமசாமி செட்டியர்ரவர்கள்**

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிமீது

இயற்றிய

# விநோத நவரசக் கிர்த்தனை.

இஃது

போடிநாயக்கனூர் ஸ்ரீமான் A. S. போஜய்யா என்ற

**அ. சு. சுப்பஞ் செட்டியாரவர்கள்**

பொருளுதவியின் பேரில்

போடிநாயக்கனூர்

"பங்கஜம் பிரஸில்" பதிப்பிக்கப் பெற்றது.

இதன் விலை] 1936. [அணா 4.

9276

உ

முருகன் துணை.

# மதிப்புரை.

சர்வலோக ரக்ஷகனாகிய எம்பெருமான் கிருபா கடாக்ஷத்தினாலமைந்த பேரின்பமாகிய விநோத நவரசக்கீர்த்தனை என்னும் இப் புத்தகம் தொட்டப்பநாயக்கனூர் ஜமீன் செட்டியபட்டி வித்வான் T. S. இராமசாமி செட்டியார் அவர்களால் இயற்றப் பெற்று, போடிநாயக்கனூர் மகா-ா-ா-ஸ்ரீ அ. சு. சுப்பஞ் செட்டியார் அவர்கள் பொருளுதவியின் பேரில் அச்சிடப்பெற்று வெளியிடலாயிற்று. இஃது நான்முக நெறி குறையாமலும், பாடல்கள் ஒவ்வொன்றின் எடுப்பு முதல் முடியும் வரை எதுகை வகை மாறாமலும், பேரின்ப ஞானபூஷண மேதாவிகள் எல்லாம் துதிக்க, ஸ்தோத்திரம்செய்ய மந்திரமாகவும், பாடுகின்றவர்களுக்கு தற்கால நாகரீகத்திற் கேற்றவாறு பொருந்தியும், கேட்பவர்களுக்கு மதுரமாகிய இன்பம், குதூகலம், கொண்டாட்டம், ஆனந்த ஆச்சர்யத்தை விளைவிக்கும் படியாயுள்ளது. ஆகையால் யாவரும் இதை வாங்கிப்படித்து பேரின்ப மடையுமாறு கோறுகிறேன்.

A. இராமசாமி செட்டியார்.
வித்வான்,
மீனாக்ஷிபுரம்,
போடிநாயக்கனூர் ஜமீன்.

# பிழைதிருத்தம்.

| பக்கநிர். | பாட்டுநிர். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 2 | 1 | 8 | கன்னிய | கண்ணிய |
| | | 18 | கெனிபூசணா | கெணிபூரணா |
| 3 | 3 | 5 | வேதனுர்மணி | வேதனுரமணி |
| | | 13 | தெணிவுற | தெளிவுற |
| | | 16 | வெணு | வெனு |
| 4 | | 23 | பாலகை | பலகை |
| | | 25 | நின் | நின |
| | 4 | 4 | மரை | மறை |
| 5 | 5 | 5 | திரிநாலும் | திரிநூலும் |
| 6 | | 8 | பங்குறனுனே | பங்குற்றுனே |
| 7 | 6 | 25 | கான | தான |
| 8 | 7 | 3 | பெரும்மா | பெருமா |
| | 7 | 26 | கூடல | கூடல் |
| 8 | 7 | 28 | சித்தமதிலே | சித்தமதில் |
| | 8 | 2 | கருள் | கரு |
| 9 | 8 | 14 | நிதுத்தமு | நித்தமு |

சத்திக்கணபதிதுணை.

# விநாயகர் துதி

## விருத்தம்

வன்னவாரண மாமுகனே-திரு
மாது வல்லபையாள் மணவாளனே
முன்னவா வுயர் முத்தமிழுக்கருள்
மோனசோதியே மூவுலகம் புகழ்
மன்னவா கலியாண மகேசனே
வாரியின் னமிர்தத்தை நிகர்த்திடும்
பொன்னுசா னும்புகழ் மணிகீர்த்தனம்
புங்கமாகப் புகலக்கடாட்சியே

## நேரிசை வெண்பா

வேதப்பரிமளமா மெய்யன் திருவருணை
நாதன் தருமணி விநாயகனை—நீதியொடு
பூசித்துச் செங்கமலப் பொன்னடியை
யுன்னதமாய் ஆசிப்பா மின்பமிக வாய்

இராகம் நாட்டை தாளம்—ஆதி

## பல்லவி

ஆதியோமகா கணபதி யே—மிக்க
அருமைப் பரிமள தொடையணி
பெருமைத் திரவியகுரு மணி (ஆதி)

## அநுபல்லவி

வேதமந்திர மிகுந்த கோலா
வித்தக விருத்திலங்கு சீலா

அரியுலகெதுந்தரு வேதா—வெனு
மன்னவன் றேவியென் மாதா—தினம்
அருமறை போற்றுநற் பெருமை
மிகுத்தொளிர்
அம்மணி நின்னருள் தாதா

இரவியை னிகர் சக்கிர பாணி—தம
தின்பமகனிட கல் யாணி—மிக
எழிலுரு மதுரை முத்தமிழ்ச் சங்கபால
கைபிலி னிதுறவள்ருய ராணி

அரியுரைப் பரிமலைப் பூமி—நின்
தருமைச் சிசியன் ராமசாமி பஞ்ச
அறிவிலுயரமிகு கருணை புரியுமென
தன்னையே ஆனந்தச் சேமி (கிரு)

## சோமசுந்தரக் கடவுள் துதி

### ஆசிரிய விருத்தம்.

4 மருமலியு மாகுழலு மாமறை மனோன்மணி
வாமி சிவகாமியம்மை
வளருதிருமேனி சிவஞான பரமேஸ்பரன்
மாமரைகளோது நீதன்
பெருமைமிகு நாரண னன்முக னுத்திரப்
பெயர்பெற்ற மூன்று ரூபன்
பேசுமார்க்கண்டருக் கழியாச்சிரஞ்சீவி
பேரினிமை யாயளித்தே
திருநீலகண்டனார் செய்தவத்தால்
முன்னம் தெரிசனம் செய்யவந்தே

தில்லையில் மூவாயிரம் பேருங்கொண்டாடச்
சித்திரக்கூத்தமாடி
வருசிகர கோபுரப் பொன்னொளிப் பிரகாச
மதுரைமா நகரில் வந்தோன்
மனமே கனிந்தன்பு கொண்டாடும்
ராமனின் வாசகம்பெரும் ஈசனே

## விருத்தம்

5 திருமணியான் திருப்புகழான் சுடர்கள் மூன்றும்
செப்புகின்ற வெழுவகையும் சித்திமுத்தி
தருமணியான் திரிபிறையுங் கொன்றை
யாரும் சங்கபணப் பொங்கரவுந் தலையினுட்சி
பெருமணியான் திரிநாளும் வேதம்பேசும்
பேரின்பப் பரிமளங்கொண் மதுரை க்ஷேத்ரம்
வருமணியான் திருவுருவாம் பரனைக்கொற்ற
வாமியை பங்குறனுளை வாழ்த்துவோமே

## கழுதுமலைக்கி நாம் னேரே என்ற மெட்டு

இராகம் பைரவி தாளம்—ரூபகம்

## பல்லவி

6 சோமசுந்தரனைப்பாடு ம்—ஜெக
சோதிக்கிருபை நம்மீதுப் போதக்கூடும் (சோ)

## அநுபல்லவி

துலங்கும் மீனுக்ஷியணங்கைப் பாகமுற்ற (சோ)
சோதிச்சுடரோ துச்சசிமுதுக்கணலாதிப்பர (சோ)

சுத்தன் சித்தன் பித்தன் முத்தன்
னித்தன் கத்தன்

சூர வீர தீர யேறு ஊறு தார (சோ)
சூலன் கோலன் மேலன்
சீலன் நூலன் மூலன்

சுருதித்திகழ் கிருபாகரன்
பரிதிச்சுடர் னிகர் மாபரன் (சோ)

தும்பியொடு கடுவா புலி
முன்புரி தோலணியே ஜொலி
சுகவாசனே ஜெகபூசனே மிகனேசனே
மகராசனே (சோ)

தூயன்மிகு ஞாயன் வருநேயன்
நல்லுபாயன்
துங்கக் கொன்றைத் தும்பை
கங்கைத் தங்கும் சென்னி (சோ)

தொல்லுலகிற் செய்த பாதகத்தைப்போக்கி
தூய சித்திவழி சேர்க்கும்
நல்லகலை விதியுள்ளவனுகவே
நாளுங் கிருபைக்குள்ளாக்கும்

வல்லபமுற்ற மகாவிசுவேசனே
வானர்க்கினி கானக்கதி பேணித்தரு
மோனப்பொருள் (சோ)

துங்கவரங்கன் திருமானுதய மே
தோணும் பரிகிரிப் பூமி நிதம்

புங்கமதா யதிசற்குருவை யன்பாய்
போற்றிசெய்யும் ராமசாமி—திரு
மங்களகீதப் பாமாலை யணியுய
வாகன்—கனயோகன் மனயூகன் உமை
மோகன் திரு (சோ)

இராகம் தோடி தாளம்—ஆதி

பல்லவி

7 பரமேபிறை சூடி தில்லைப்
பதியிற்றிகழப் புதுக்கூத்தாடி பர

அநுபல்லவி

வரமேதருமனப் பெரும்மா னே
மாமயசித்தனே—பாமயகத்தனே
வடிசுடரிடு விடவர வினை
தடபுயவரை யிடைநணி தொடு
வாகா யோகா
வரிவிழி பரை—யொருபுற முறை—தரு
வுருவனே—அரகர சிவ நமசிவாயப்
பொருளே—கதிபிதே—கதியருளே பர

முடுகு

பந்தமொடு சந்தமிகு கந்தன்றனை—தந்த
புந்தியான்
பரிந்து வனந்தன் சுமந்த ஜெகற்றிலுகந்தவ
ரெந்தரும் வந்துபணிந்திடு
சுந்தமலிந்திடு விந்தமலர்ப்பதனே

கனகுண்டலம் செவினக்கிய
மனங்கொண்டவர்க் கருள் முக்கிய
காரண சூட்சிய மயாபதி
பூரண மோட்சியனயா கதி பர

பத்துஉருப்பெற்றவனும் கத்தனுமே
னத்தியரி யாப்
பாதன் நாதன் நீதன்—ரிசி
பாலகனுரொடு மேலிடு காலனை
ஓலமிடும்படி—காலி னுதைத்தவனே
பார்பதி பரையுமை மாதுயோர் பெரயிணை பிரியாது
பாங்குயர் கூடலப்பதி யே
ஓங்கியே வளருவ விதி யே
பத்திசேவிப்பராமன் சித்தமதிலே வந்துதவு
பாரக் குன்றுவில்லி
வீரஜெய நயவல்லி பரமே

இராகம் ஆனந்தப்பைரவி—தாளம்—ரூபகம்

பல்லவி

8 நடராஜனைத் தினம்துதி மனமே—மிக
நம்புமவர்க்கருள் ளின்பந் தருந்திரு (நட)

அநுபல்லவி

விடவரவணி வேணிவிஸ்வேசனை
மேதலம் பூதலம் யேற்றுநற் பூசனை
அடியவர் னெஞ்சகமாம் பிரகாசனை
ஆனந்த மாமதுரா புரிவாசனை (நட)

நாரணியம்பிகை வாமிதன் பாகன்
நற்குண மூன்றுடை நாதனல் யூகன்
காரணத்திரவிய கர்த்தனும் யோகன்
கங்கையைத் திங்களைச் சூடிய வாகன் (நட)

சீரணிமானிலச் செம்மலாமாதி
திவ்விய சோபனம் திகழ்பிரக்காதி
நேரணிசாம்ப சிவாயனற் சோதி
நிதுத்தமு ராமனின் சித்தமயாதி (நட)

சதாதுதிக்க மதுரை என்ற மெட்டு.

ராகம் தேசிகம்-தாளம்—ரூபகம்.

பல்லவி

9 திருமதுரா புரியில்வாழும் தேவ தேவனே
செழுமாமறை திரிநாலும்
யெழிலா யிசைரவி சாலும் (திரு)

அநுபல்லவி

சித்திபெரு முத்திதரு சத்தியொடு னித்தியமாய் (திரு)
திங்களுமா சுணமா நதி
தங்கிய தும்பை சதாவுதி
புங்கசடா மகுடா சிவ
சங்கர மூர்த்தி நயாநவ (திரு)

சித்திரச் செந்தமிழ் நீட்சி
னித்திலம் பொன்னொளி மாட்சி
சீரார் தருபுவி நாதன்
னேரார் கெணிமணி வேதன்
தேவருமே கண்டுபெறு
ஒவியமாயா வலுறு (திரு)

சித்தன் முத்தன் பித்தன் சுத்தனித்தன்
கத்தன் திரிலோக அபிசேகன் தருபோல குணவாகன்
திருராமன் சிந்தை துதிபெருமோன சந்நிதி (திரு)

## மகாவிஷ்ணு துதி.

### ஆசிரிய விருத்தம்.

10 திருமகள் சதாவளரு தாரமணி மார்பனன்
தேவநாயக நாரணன்
திகழ்மறை முகாதி பகவானுலகநாத
னெனுஞ் செப்பரிய தானயோகன்
வருசுடர்கள் மூன்றுமாய் திரிகுண
மகாநந்தமான தொழிலது மூன்றுமாய்
வகையுற்ற எழுவிதத் தோற்றமும்
புவிபேசும் வாசக மனைத்துமாகி
நருதுளபமாலை யணிகிரி புயவிசாலமுறு
ராஜகோபால மூர்த்தி.
நம்புமிமை யோர்க்கரிய வாரியமுதூட்டிய
நந்த கோவிந்த வாமன்
பெரு சிதமுனன் மறைப்பரி மளப்பரிகிரி
பெற்ற சிங்கார வாகன்
பேரினிமை நேமகுண ராமனின் மதுரநூற்
பெருமைகண் டுவக்கும் பெம்மான்

### பாலாபிஷேகம் என்ற மெட்டு.

ராகம் பியாக்-தாளம்—அடதாளம்.

பல்லவி

11 சீதாபிராமன் திரைக்கடல் வண்ணனும்
தேவர் கொண்டாடுந் திருமுகுந்தன் (சீ)

அநுபல்லவி

வேதா விநோதனற் ருதா சதாதுதி
மெய்ப்பொரு ளற்புத வித்வசந்தன் (சீ)

தொகையரு

கீதானற் போதானன் நீதாபிதா நிதா
கேசவன் சீனி வாசன்

பாட்டு

கிளர்பெறுந் திரிக்குடை
னிழற்று முல்லாசன்
வளரொளி பணிமுடி வரும்பிரகாசன்
வாசன் பவநாசன்
பேசும் சருவேசன்
வன்மைமிகு நேமியாயுதத்தான்

பாட்டு

சீலானற் கோலா னண்நூலா வலா
கொற்றசிந் தூரத்தி லகனுதலான்
திருபுவி யனைத்தையு மளவிடு பாதன்
தருபுவி யவர்க்கமு தளித்த விநோதன்
சீர்த்திசேர் ராமனின் தோத்திரக் கீர்த்தனத்
தேனூர் லங்கலணி புயத்தான்

அற்புத பூதமலை என்ற மெட்டு.

ராகம் வராளி-தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

12 தேன்பொழியும் வாசிமலைச் சீனிவாசா
தேடியுனைப் பாடினேனே தினபூசா

திரல்பெருந் தனுவிரா
விரலுயர்ந்த வுதாரா
சேமாமணி ராமாவணி
தித்துக்கனி முத்துத்தனி (தே)

பூந்துளபமாலை யணிபுய தீரா
போற்றிசெய்யு மடியவற் குபகாரா
புதுமைரஞ்சித போதா
மதுரமிஞ்சிய கீதா
புங்காவரு ரங்காதிரு
பூமாதுதி வாமாததி (தே)

மங்களஞ்சேர் செட்டிநகர் வளர்சேமி
மாதவத்தோ ரிஷ்டமிகு ராமசாமி
மதுரமுத் தமிழாரா
குதிரையுந் துமகாரா
வாசா ஜெகதீசா
சுகவானே பெருமானே நரு (தே)

பரமாநந்த மெய்ப்பரங்குன்றம் என்ற மெட்டு.
இராகம் தேசிகத்தோடி-தாளம்—ஆதி.

பல்லவி

13 ரகுநாதனே புகழ்சங்கீதா நந்தகோபால (ர)
நாரணனேயரி போதவினோதா
நளிமுகில் மேனியனே பிரக்யாதா
ஆரணமா முகனேன் குணநீதா
அமசமலரினுரை யணங்குச மேதா (ர)

அநுபல்லவி

ஜெகதீசனே ஜெய கெம்பீரா
அசோதையருள்
மகனே நிருதர்கள் சம்மாரா
திருமருவு
சுகனே நறுந்துளபத் தாரா
அழகுபெறு
ஜெக மெங்கினும் புகழ் சிங்காரா
தேவருக் கமுதளித்திடு முபகாரா
ஜெனகன் மருகனே வரிசிலை வீரா
மூவருமொரு உருவாமதி காரா
முத்தா சித்தா வித்தா
சுத்தா ணித்தா கத்தா
மூலகாரணச் சுகந்த கோலனே மணஞ்சிறந்த
மூகா யோகா வாகா
மோனவிசால விராஜனே
பானுகுலாதிப ஈசனே
முச்சுடாச்சுத நேமி
ரெச்சக னிட்சய சாமி (ர)

நவநீதமங்கள விலாசா
அரியநெடு
சிவயோக புங்கபர வாசா
வணிதிகழும்
புவி யெங்கினிலும் பிரகாசா
அதிமதுரக்
கவிநாயப் பொருள் விசேசா

நாலிரு மந்திர தியான மயேசா
நற்குண மூன்றுடை ராமனே பூசா
கோலனற் சந்திர சேகர னேசா
கும்பா னன்பா வம்பா
பண்பா யின்பா அன்பா
கோலமே லுறச் சிறந்த
நீல வேலையிற் றுயின்ற
கோனே தானே வானே
கோசிகம் பேசு விலாசனே
ஸௌஷனி லாசன னேசனே
கொஞ்சிப் போற்றிய ராமனி
னெஞ்ச மேவிய சேமனே (ர)

சேந்திற் குமரவேல் என்ற மெட்டு.

கண்ணிகள்.

14 கண்ணபிரா னமக்குண்டு கனிந்து பேச (க)
கருணைக்கொரு பொருளருணத் திருமய
பரனுக்கொரு வகைத்தருண முதவிய (க)

வண்ணனதி விசேஷன்
மங்கை லட்சிமி நேசன்
வரதத்திரு ரதப்புரவிக் கடவிய
சுருதிக் கடவுளரு ருதிக்குணமய (க)

அண்ணலகில நாதன் ஐவர்க்கருள் விநோதன்
அரக்கரைப் பெரு செருக் களத்தினி
லுருக்குலைந்திட நெருக்கிய திரு (க)

புண்ணியப் பரிமலை பூமியுரை ராமையா
புரிந்தமா மதுரங் கமழுறும்
சிறந்த செந்தமிழா ராமேயாரும் (க)

உ

ஸ்ரீமுருகன் துணை.

## ஆசிரிய விருத்தம்.

15 சீருலவு வானுலக பூமனொடு தேவர் முதல்
செப்புமா சித்தரெண்மர்
தேறுசிவ யோகியர்க ளானவர்க ளொரு
கோடி சித்திரதலாதி தேவர்
ஏறுலவு மூவரு மகாவினிது கொண்டாடும்
எம்பிரா னறுமுகவன்
எப்பெரிய சூரறுருக் கூர்விறச் சிதைத்திட்ட
யெல்லொளியு காரவேலன்
நேருலவு பூமயில்மீது குஞ்சரி வள்ளி
நேசமனை மாதருடு நின்றுநடி காணவரு
சாமிகிருபா குகநித்திய சுபனே கடம்பத்
தாருலவு தோளுடைய சம்பிரமசடாட்சரன்
தந்தை தனக்குப தேசிதன்
சந்தமிகு வணிகர் கருரை ராமனிதையம் வளர்
சற்குணமயா முருகனே.

## விருத்தம்

16 தருவைனேரு தகுந்த மதுர நூல்
பெருகுவாரிப் பிரணவசித்தியான்
திருகலாபச் சிகிமிசை யம்பெரு
முருகவேளின் முளரிக ளேற்றுவாம்

இராகம் செஞ்சுருட்டி தாளம்—ஆதி

## பல்லவி

17 தேனுருங்கடம்ப கந்தன் சேவடியைப் பணிவாம்
செந்தேனுரும்

## அநுபல்லவி

பானுருஞ் செங்கதிரிதையப்
பரமன்றிரு செவிமறை யருளினியத் தே

திடமொடு படிகுவடதிரிட
நடமிடு மடமயில் கடவிய
தேசிகன் வாசமயேச விசாகன்
பூசிகபூஷணனே சபிசேகன்
தேவியுபா பரை சுந்தரி
மாவிதபூசை னிரந்தரி
சிந்தை யுகந்து சிறந்த னிரந்தர
னெந்தவகைக்கு மிவன் பெறுந்தந்திரன்
தீர சூர வேலன் அதி
கார வீர மேலன்

சித்திரம் னிகர்த்திடு சுரத்தியும்
வனத்தியுமினித்தனன் மனத்

தொடுவணைத்திடு சுகத்தன
மருத்துவன்

ஜெயசோபனமய சற்குரு
னயபூபதி புயம் னற்புரு
சிரந்தபரிமளங் கமழ்ந்து திகழ்செந் தே

முடுகு

செந்தமிழ் முந்திருமந்திரமும் பெரு
சேவலாழி துரை
பாவலாழி மறை
தேவதேவ ரணி
சேனை காவு மணி

திங்களுமங்குல மங்கள மிங்கித
சங்கத் துங்கத் தங்கப் பாங்கிரி
சீர்சிரந்த நாதன் மிகு
ஏர்சிரந்த கீதன்
சேமமாகனி தம் ராமசாமி துதி
திருநவதிரல் மணி
ஒருமணிவானவன்
திரிபுவனம் பணி
சுவசுப்பிர மணி
தித்துப்பாலபிஷேக சித்ர உரு
முத்தழகு திருவாசக முருகன்வரு
தரைபூசித பெருமா னொரு தே

அமாரநபி மேர என்ற மெட்டு

இராகம் அமீர் கல்யாணி தாளம்—ஆதி

பல்லவி

18 வேலனையே தினம் வேண்டிக்
கொண்டாடு வோம் வே

அநுபல்லவி

காலன்றனை யுதைத்த
கங்காதர னளித்த
பாலன்றிரு முருகப் பண்டிதக் குமர க்ந்த வே

தொகையரு

விரல்மேவு புயதீர குருசாமி சம்பிர்ம
மெய்ப்பொருள் விசாக மூர்த்தி
புருகூதனருமைம்மா மருகனை
ஜெகமெங்கும் போற்றியே புகழும்நேற்றி

பாட்டு

புதுமைச் சங்கீத போதன்
புகலும் வள்ளிசமேதன்
மதுரச் செந்தமிழ் ராமன்
மனதிற்றிகழ் சிங்கார வே

தந்தானதானதிதான என்ற மெட்டு

இராகம் காப்பி தாளம்—ஆதி

பல்லவி

19 சங்கீத சங்கப்புலமை
தங்கும் புங்க சிங்காரத்துரை ச

அநுபல்லவி

சற்குருவே பொற்றருவே
சாலுமருள் தரு
வேலா திகழுறு
சரவண குகனே
குறமகள் சுகனே
சம்பிர அம்பா ரின்புர நீடி
தைத்தோந்திரிகிட தரிகிட தோமென
தணிமணி மேளம் தம்பூருதவிய ச

வங்கார மரகத மயிலா னெங்கெங்கும்
வருதரு வொயிலான்
மந்திரனும் தந்திரனும்
மணியான் சுப்பிர மணியான் பொற்புறு
வாமிக்கினிமை செய்
சாமித்திரு நய
மங்கள மிங்கித புங்கவிசாகன்
வந்தித்தே ராமையா பணி
சந்தக்கந்தன் விந்தைக் குருமணி ச

ஆசிரிய விருத்தம்

20 சக்கிரிவரங்கரகு ராமனும் வாமன
சாமளன் றனது மருகா
தஞ்சமென நம்புமவர் சிந்தைகுடி
கொண்டருளுஞ் சாமிதிரு ஞானரூபா
சக்கிரக ணைமுறுபூ மயிலின் மீதுவரு

சம்பிர்மமான குமரா
தக்கபுகளூறு குறமாது தெய்வானையும்
தழுவுமோ ராறுமுகனே
சக்கிரி யெதற்குமாய் நீதிபரிபாலன
சர்வசீவாமி நாதி
சண்டமிகு வீரபூதண்டபடை சீரொடு
தங்குமீராறு கையா
சக்கிரி குலத்திலுதி திருநீலனுக்குதவு
சங்கரன் தந்த சுதனே
தரைமீதிலுயர் நேமதுதி ராமதாசனை
தற்காத்து ரக்ஷி குகனே

பாண்டியனீன்ற மீனாட்சி என்ற மெட்டு

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம்—ஆதி

பல்லவி

21 நித்தியகல்யாண சிங்காரா உதாரா
நெடியகுன்றாரா

அநுபல்லவி

சத்திவே லேந்துமெய்யா ராகிருபைச்
சாமியே தீரா நித்

தொகையறு

நெடுமாலி னருமைமா மருகனே முருகனே
நிர்த்தனநீல மயிலா

நடுநாயகா புவியாவினும் பிரகாச
னற்கதி ளுட்டு மொயிலா

பல்லவி

நம்பினே னுந்தனை ளுனே யருள்தா
உம்பர்கள் கோனே நித்

தொகையரு

நாதாந்த சூட்சியே
வேதாந்த சாட்சியே
நாளுகவிக்கு மூலா
பூதாந்த மாதங்க மாமங்கை வள்ளியும்
பூமுத்தம் வைக்குஞ் சீலா

பல்லவி

பொன்னைநேர் புலமை ராமையா பணியும்
பன்னிரு கையா னித்

கண்டாசைகொண்டேளு னடி என்ற வர்ணமெட்டு

பின் மகுடம்

பல்லவி

22 பண்டாரத் தெண்டாயுதபாணி
பைந்தமிழ்ப் பூணி பண்

அநுபல்லவி

பரமன்றனக் குபதேசித்த
பெருமான்றிரு தனைபூசித — பண்

பாரமலைப் புயமூ ருகதம் பெறு
தாருகடம்பணி ஆறுமுகனற்கோலா
பரம்பொருள் விசாலா படிக்க வனுகூலா

பண்டு கொண்டு அண்டர் தொண்டு கண்டு செயும்
பங்கயப்பூ மலர்ப்பாதா
சங்கிதனேவுயர் போதா — பண்

பத்திரத்தை வொத்திசைத்த
சித்திரம் னிகர்த்தவுறு
முத்துநவரத்தின மதித்தனு முதித்தவொளி
பத்தும் னித்தா கத்தா மெத்தா
சித்தா சுத்தா

பாடுந்திசைக் கவி ராயா
நாடுமவர்க் கருள் நேயா
பரங்கிரி ஆண்டி
வேலாண்டி குமராண்டி
பொன்னாண்டி

பத்திசேவிக்கும் ராமன் சித்தத்தின்
பரிபூரண வானந்தக் குருசாமியாய் வந்த — பண்

## திருப்புகழ்

வங்காரமார்பிலணி என்ற மெட்டு

இராகம் தேசிகதோடி தாளம்—திரிபுடை

### கண்ணிகள்

23 சங்கீதமா பெரியசாகர மெனத் திகழும்
அங்காரு சாமிசிவகாமியருள் பாலகனே
சிங்காரரூப மயிலேறி விளையாடிவருந் திறல்வீரா

வெங்கோப சூராணி நாலுவித சேனைதனை
ஓங்கார சூரவடிவேலதனையேவி முனைஞ்
சங்காரஞ் செய்தமுருகேச குகனேயரிய தாஸ்டீகா

பொங்கோதை மூவுலகு மூடுருவ தேர்கடவி
சங்கேந்தி மால்மருகனேவனதி குஞ்சரிதன்
பங்கான தேசிகனே பேரினிமையாயுதவு படிமீதே

மங்காத சோதிமயமான நவமாமணிக
ளங்காருமோன பரங்குன்றிறைவனே யிரவி
சங்கான ஆறுமுகநாத குமரா கிருபை யருள்வாயே

இராகம் தேசிக கவாய் தாளம்—ஆதி

### பல்லவி

24 பன்னிருகரவேலா சிவபாலாகுணசீலா ப

அநுபல்லவி

வன்னமயிலின்மிசை யுமைமுருகேசா
மதியணிபரன் செவிதனிலுப தேசா
மின்னுறு மிளரவியிலும்பிர காசா
மேதினிபுகழுமா வூற்றினில் வாசா — ப

உன்னிதத் திருப்புகழுயர் மறை முழங்கும்
ஓய்வறச் சங்கொலி கீதங்கள் வளங்கும் — ப
துன்னியெ வமரர்செய் தோத்திரம் மிலங்கும்
சோபனக் குடைனிழற் பரங்கிரி விளங்கும் — ப

பங்கையனைக் கொடுஞ்சிறையினி லோட்டி
பாவியசுரர்களைப் பதைத்திட வாட்டி
புங்கவனிந்திரற்குப் பொன்முடிசூட்டி
பூதிரு வீரகண்டாமணி பூட்டி — ப

அங்கையிற் சங்கொடு தண்டமுநேமி
அச்சுதனுருறை மாகிரிப் பூமி
சங்கையிலாவுரை தரும்ராமசாமி
தன்னிருதயம் பிரகாசிக்குஞ் சேமி — (பன்)

இராகம்-மத்தியமாவதி—தாளம் ரூபகம்.

பல்லவி

25 கந்தவேளினை யெந்தவேளையுங் கனிந்து
கூறுவோம் நாமே — க

அநுபல்லவி

வந்தவேளினை முந்தவெரித்திடு
மாசுணச் சென்னியனுசைக்குமரனை — க

முந்தப் புரிந்த வினையைப் பொடிக்கும்
முனைத் தெழுமதன் வலியைக் கெடுக்கும்
தொந் தரிக்குமெம தூதரைத் தடுக்கும்

சூட்சியன் மாட்சிமை காட்சிபெரும்
ஜெகசோதிச் சுப்பிரமண்ய நாதன்றிடத் திண்ய
சூரரக்கரைப் பெருத்த கூரையில்கொண்டே கிழித்த
வீரமுந்து கச்சிரத்தன்
ஆரமந்திரப் புயத்தன்

சுந்தன் நந்தன் சிந்தன்
சோபனமா முருகேசன்
கோபழனுபுரி வாசன்
சூரத்திரு மயிலேறிய லாவண்யன் க

சந்தமறையைப் பேச வாக்கும்
சாலுமந்திரப் பொருளைச் சேர்க்கும்
செந்தமிழ்த் தொடைசூட்டிக் காக்கும்
சீர்த்திசேர் கார்த்திகை தோத்திரனே

முடுகு

வுயர் தேமலித்த ருச்சிறந்த காமனின்மனம் பொருந்த
பூமுடிப் புனைவுதந்த சாமியற்புதந் தகுந்த
சீலன் நூலன் மேலன்
தேவ தயாபதி ஈசன்
மூவர் மகிழ்கவி ராசன்
சேமமாய் போற்றிய ராமன் தயாநிதி க

இராகம்-தோடி தாளம்—ஆதி

பல்லவி

26 மயில்வாகனக் குமரனைத் துதி மனமே உயர்
மந்திரவா நந்த சுந்தரக் கந்தனை மயி

அநுபல்லவி

வண்டுகள் வண்டலைக்
கொண்ட கடம்பணி
யண்டர் பிரான்திரு
பண்டித னன்மணி மயி

வாசங் கமழுற்றிடு னன்மறை
பேசுந் திரிலோகமு பன்முறை
மங்களத் துதி முழங்கும்
சங்கித சமா விளங்கும்
மாமுருகேசன் பவநாசன் மலர்வாசன்
வன்னத் தினகர சோதி
பொன்னுக் கருணை நீதி மயி

வக்கிரதந்த மிலங்கு மரக்கரை
உக்கிரவேலதை யேவி நெருக்கிய
மங்கள விங்கித சங்கிதமாகுரு
சங்கரனாருள் சாமி மகாதிரு மயி

மதுரச்சித்திர முத்தமிழ் சங்கத்தொரு
நாளுற்றெழு வித்வ சிங்கம்
வாரண பொற்கொடி யாளன்

பூரண னற்றய வாளன்
வந்தித்தே ராமையா புகழ்
சந்தச் சொந்த விந்தைக் குருமணி மயி

### ஆசிரிய விருத்தம்.

27 பஞ்சசர மாரன்வலை யூடுனுளை யாதவகை
பண்புமிகு சிந்தை புரிவோன்
பங்கையனை னீடுசிறை காணவிடு
வானவன் பாலகுருநாத கந்தன்
பஞ்சதருனீள் னிழலிலா னவனின்
மோடியர் படைத்தலைவனு யெழுந்தோன்
பாருலகி லாரணமோ ராயிரமு நாடியே
பாடுதற் கரியசாமி
பஞ்சவகை தம்முட னிருவகைத் தோற்றமாம்
பரமனின் குருவாகினோன்
பரிமள மகாதுதி விசேஷமிகு மாட்சிமை
பழனிமலை மீதிலுற்றோன்
பஞ்சவரி வொருமையுடன் றதிராம சாமிதன்
பாடலுக் குதவியானோர்
பண்டிதவிசாக முருகேச கவிராசனும்
பருபதகுமாரி மகனே

சிங்காரச் சம்பிர மாதே என்ற வர்ணமெட்டில் பின் மகுடம்.

### பல்லவி

28 வந்தாடுங் காவடி சேவை
மந்த்ரக்கந்தா நந்தா யென்றே

அநுபல்லவி

கொந்தாருங் கந்தகடம்பக்
கோலச் சித்ரவேல் வேலென்றே வ

மத்தள முரசொடு கொத்துப்பறைகள்
தித்தீம் தித்தீம் தித்தீமென்றே வ

மதுரக் கவிகளை விகசித் திரமொடு
புதுரஞ் சிதமாய் புகழ்ந்து பாடியே வ

முடுகு

வங்கசதங்கை குலுங்க நடம்புரி
துங்கத் தங்கச் சங்கரனுல்வரு
வாசா நித்திய பூசா சித்திர
வடிவேல் வடிவேல் வடிவேலென்றே வ

வண்டுனிரை வண்டு வருமண்டுநரு
வண்டுளப னெண்டிரைவ னெண்டிசை
முதண்டபிர சண்டனெனு
வந்துற்றவ னின்ப விலாசா
முந்துற்றவ னறம்பிமயேசா
மதுரக்கவி மழைபொழிதரு
புதுரஞ்சித புலமைக்குரு
வருதருசு ரபதிதிரு மருமகனெனு
வருசரவணபவ அறுமுக குகனே
மரகத மாமயில் குரகத மேறி
வாவா ராமனைக் காவா
மந்திர வடிவேல் வடிவேல் வடிவேலென்றே வ

கோந்தாரும் பூங்கணையால் மோக மாகினேனே என்ற வர்ண மெட்டு.

*இராகம் இந்துஸ்தான் தோடி தாளம்—ஆதி.*

பல்லவி

29 *தண்டாயுதன் நாமமே*
*சாத்திஞல் க்ஷேமமே*

அநுபல்லவி

*பண்டார யோகன் பத்ரவிசாகன்*
*பரமனுக்குப் தேசன்*
*முரு கேசன்*
*பவ நாசன்*
*திருப்*
*பரங்கிரிக்கும் ரேசன்*
*இந்தப்பாரிற் றெழுபவர் சொந்தன்*
*நாருங் கடம்பணி கந்தன்*
*பட்டப்பக லொட்டப் பெறு*
*எட்டத்திர மிட்டக்கன* *தண்*

*கண்டார்க்குக் காட்சி*
*கண்காண மாட்சி*
*கருணைசெய்திடு யோகன்*
*மனயூகன் மிகுவாகன்*
*திருக் கார்த்திகனே விவேகன்*
*நெடு கார்மழை னேர்கவி ராசன்*
*சீர்தருமா கதிரேசன்*
*கத்தன் பரிசுத்தன் மிகு*
*சித்தன் மணிமுத்தன் திரு* *தண்*

கொண்டாடும் வாகன் கும்பாபிசேகன்
குலவுசுந்தர வேலன்
தனசீலன் மறை மூலன்
மணக்கோல குஞ்சரி லீலன் புவி
கூறும்பல பொரு ளாளன்
தேறுங்கன திருவேளன்
கோலத்திரு ராமன்புகழ்
சாலும்புவி மேலுந்திகழ் தன்

ஐயா பழனிமலை வேலா என்ற மெட்டு
இராகம் சகாணு—தாளம் ஆதி.

கண்ணிகள்.

30 தேவா பரங்கிரிக் குமாரா உயர்
திருமறைப் பரிமள திரேக சிங்காரா
காவா திருக் கடம்பத் தாரா பல
கலைக்கனு சரணையே புரியுங் கெம்பீரா தே

மூவா ரகமகிழும் போதா சிவ
முருக வேலாயுத வறுமுக நாதா
தாவாவி லாமலருள்தா தா உயர்
சர்வதயாபர சாமிவி னைதா தே

மாவூற்று மலைப்பதி வாசா வகை
மதிக்க வரியநெடு மௌனப் பிரகாசா
நாவா யிரணியற்றும் பூசா கன
நதியணிப் பரமனுர் தமக்குப தேசா தே

பூவாரும் புள்ளிமயில் வாகா துதி
புரிதிரு ராமனுக்குதவிய யோகா
பாவாருஞ் சண்முகனே யூகா தினம்
பாங்குள குறமகள் குஞ்சரி மோகா தே

மனமோகன மானே என்ற மெட்டு.

இராகம் பிலகாரி—தாளம் ஏகம்.

பல்லவி

31 மயில்வாகன வேலனே பரை
வாமியம்பிகை பாலனே மயி

அநுபல்லவி

குயிலோசைக் குறத்தி குஞ்சரி
கொஞ்சி மருவிட ரஞ்சிதமே புரி
கொண்டாடிய பண்டாரனே
தண்டாயுதத் திண்டோளனே மயி

ஜெயசோபன கோலனே வரு
சித்திரக்கலை மூலனே
திருராமனின் கருணாகர
முருகா அரி மருகா ஒரு மயி

சந்தவரை வத்தகுக நாதா என்ற மெட்டு.

கண்ணிகள்

32 தொட்டையனூர் செட்டிநகர் வாசன்
கலை
துங்கவர்கள் மெச்சு ராமதாசன்

இசை
சொல்லினுக்குதவு முருகேசன்
பவநாசன் கவிராசன்
திட
தும்பிமுகன் றம்பி யன்பர்நேசன்
நொட்டைவலிகட்கு கவிக்கூட்டன்
உம்பர்
இஸ்டமுற பஸ்டமுதை யூட்டன்
ரெம்ப
ரைட்டெனவும் இட்டமிடல் சிரேஸ்டன்
மறை
கோஸ்டன் மிக சேஷ்டன்
மனு
நீத குருநாதனே கொண்டாட்டன்
சந்தபுவியெந்துமதி காரன்
முந்த
வெந்திர லரக்கர்கள் சம்மாரன்
விந்தை
செந்தமிட்க் குதவு முபகாரன்
ஜெயதாரன் மிகு தீரன்
திருச்
சண்முகனை மின்னு மயில் வீரன்
அந்தரமே வந்த புவியாளன்
தந்த
சுந்தரத் தெய்வானை மணவாளன்
கந்த
கொந்துபெரும் பூக்கடம்பத் தோளன்
சற்குணாளன் மறைத்தாளன்
தரு
தன்னை நிகர்வுற்ற கொடையாளன்

ஓதிருநெல்லூர்வழ ரோய்யாரா என்ற மெட்டு
இராகம் செஞ்சுருட்டி தாளம்—சாப்பு

33 தேசிகமயில் கடவு நாதா கவி
ராசனே சடாக்ஷர விநோதா உயர்
வாசவன் மருகனே சங்கீதா திகழ்
சித்தனே பரமகுரு கத்தனே
ஜெயவிசைய தீரா வலங்காரா
கோசிக வதன முருகேசா
கழு
காசலத்தின் மேவுகுமரேசா
ஜெக
தீசனுக்கு மந்திர வுபதேசா
எழில்
குஞ்சரியொடு கிராத வஞ்சியும்
கொஞ்சிமருவுங் கோலா
பரை பாலா
காரணப் பழனிமலை வேலே
மிகு
தாரணக் கடவுளே பண்மேலா
மனப்
பூரணமுட னுதவு சீலா
உயர்
கந்தனே கடம்பணிந்த சந்தனே
ஒரு பன்னி ருகையா யெனதையா
ஆரணம் புகழும் பெரியோனே
அரி
நாரணன் மகிழுந் திறவானே

நெடு
வாரணக்கொடிக்குகந்த கோனே
மிகு
அன்பொடு பணியும் ராமனன்
பனுக்கருள் சிவ சுப்பையா
ரவி மெய்யா

ராமபஜன கோதியா என்ற மெட்டு

இராகம் தேசிகதோடி தாளம்—சாப்பு

பல்லவி

34 வேலுமயிலை யெண்ணுவாம் இரவிவடி வே

அநுபல்லவி

கோலவிசரகன் குஞ்சரி பாகன்
கோமுருகனே யோகன்
பரம குகன் வே
மூலமந்திர நாம் மோக்ஷ தற்பர நாம்.
மோன சம்பிர திரநாம்
ஜெய விசையன் வே

தொகையரு

மேலான யோக நூலோர்கள் மெய்க்கும்
வித்தகராச நேசன்
பாலாபிஷேக மேலாய்ச் சிரந்த
பத்திரப் பழனி வாசன்

பாட்டு

பரிதியினுயர் கதிர் படர்ந்த திரேகன்
பாவலன் ராமனுக் குதவிய வாகன வே

ஆசிரிய விருத்தம்

35 அரியயுலக நீதிவழிமாறி வெகு தீதுசெயு
மானவரை நிக்ரகித்தே
அனுதினமு நேயமனதாகி மிகவோது மவரல்
லலைத்தீற்கு முருகன்
அரிகரிய மேனிசுப நாரணனயந்தினி
மையாகி மிடலீயு தீரன்
அரனிடமுன் மாங்கனிப்பெறவேண்டி
பூமிமுழுதறை நொடியிலேகி வந்தோன்
அரிபெரிய வாசன மேற்றும முடிசூட்டியே
விமான வனையாளவைத் தோன்
அற்புத விசேஷ பிரகாச நெடுமூவரினு
மாமுதலிலே யெழுந்த
அரிகரி முகாதிகண னுதனொடு
கூடவரு ஆறுமுகமான பொருளே
அன்பொடு சதாதுதிசெய் ராமனின்
மதுரநூலாரமணிகின்ற குகனே

கண்டாலானந்தமே கந்தன் பாலபிஷேகம் என்ற மெட்டு
இராகம் இந்துஸ்தான்பியாக் தாளம்—ஆதி

பல்லவி

ஆண்டி வேலாண்டியே
அண்டர்புகழ் பழனி ஆ

அநுபல்லவி

தூண்டிப்பரிகடவி சுந்தரவரி மருகா ஆ

அரனுக்கினிவாகிச் செவியுற
திருமந்திர போதக்குருபர ஆ

அற்புத மொய்த்திடு பொற்புறு சித்தி
விற்பன முற்றிய கத்தனேவெற்றி ஆ

அம்பர ரின்பொடு தம்புரு சங்கம்
பம் பம் பம் பெனும் சம்பிர பழனி ஆ

ஆரணமு கனேயம்பிகை பாலா
ஆரா தரனே அற்புதசோதி
அடர்ந்த வாசனை கடம்பவாகா
அறுமா முகனேயருமைப்பூசா
ஐயாபரிமள மெய்யா மணிமுத்தையா
பொன்முருகையா பழனி ஆ

ஆதிமறையோது மணிநாதம் நல்விசேஷம்
அற்புத நவமணிகள் பொற்புறுப் பிரகாசம்
மேதினியெலாம்துதிக்கும் மெய்ப்புகழ் விலாசம்
மிக்கவிரையுற்ற மலர்கற்பூரத்தின் வாசம்

மிஞ்சுதவ வுத்தமர்களாட்டம் எழில்
கொஞ்சுபொன்னுக் காவடிகள் நாட்டம் நிதம்
வஞ்சியர்கள் னர்த்தனமெ தேஸ்டம் கலை
ரஞ்சிதமாரர்மன் புகழ்னீட்டம்

மிகும் பழனி வாசா
செகம்புகழ் விசேஷா
சுகமணமயேசா
குகமணி னற்பூசா பொன்னு

இராகம் தேசிகம் தாளம்—அடதாளம்

கண்ணிகள்

36 ஆறுமுகனே யீராறுகை வேலா
அந்தரியாள்பரை தந்திடும் பாலா
கூறுமடியார் தமக் கனுகூலா
கோலாகலா சம்பிரமேலா நலா அம்பர ஆ

நாறுங்கடம்ப வலங்கலைச்சூடி
நங்கை குறத்தி தெய்வானையைக் கூடி
யாறும்வியப்பத் திசைக்கவி பாடி
அண்டரண்ட காணிதண்டாயுதபாணி ஆ

காரணமந்திர கடாட்சமிக்கோனே
கற்பகத்தோர் களியற்று நல்லோனே
வாரண பொற்கொடி வாய்த்தபிரானே
வந்தாதரித்தருள் கந்தாபரம்பொருள் ஆ

சூரயிலே கொடுசூரரை வாட்டி
சோபன காமனுக்கோமுடி சூட்டி
பாரினில் ராமன்தனக் கருளூட்டி
பத்திரப் பரங்கிரி கத்தாவணிசெரி ஆ

இராகம் தோடி தாளம்—ரூபகம்

பல்லவி

37 கடம்ப சண்முகனே திரிமத
கரிமுக கணபதி யொடுவரு
திருமுகனே சரவணை தறு
காரணமானவிசால
பூரணமோனனே கோல கட

அநுபல்லவி

நெடும்புனல் மருங்குற்றனற் சுத்தனே
னிண்ணையமிகு தென்முனிசித்தனே
மடங்கலென்ன வயம்பெறுங் கத்தனே

வம்பபண்பபூ மா சம்பிர இன்பக்காமா
வாரிதனிலே துயின்ற நாரணந்தயை புரிந்த
வாகுறு ஞான விநோதா
மாகுற மாது சமேதா
மந்திர தந்திர வந்திர ரிந்திரர்
வந்துபணிந்திடும் கட

நடம்புரிமயில் மீதுரைக் கந்தனே
நாரணியம்பிகை யந்தரிமைந்தனே
தடந்தவராத பூசிதச் சொந்தனே

தாரணியெலா மகிழ்ந்து
கூறும்நற்புகழ் சிரந்த

தங்கப்பரங்கிரி யினிலுறை
யெங்கும் புகழ் பெருகியதுரை
சதுர்மறைகளு மிகதுதிபுரி முதல்வனே
தஞ்சமிது ததி நெஞ்சமருள்நிதி
கொஞ்சுந்திரி கலைரஞ்சிதனே மிக
குலவுந்திரு ராமன் புகழில குமபரி
மளமே திகழ் கட

அடுக்குமல்லிகை தொடுக்கு மெத்தையிலே என்ற மெட்டு

இராகம் செஞ்சுருட்டி தாளம்—ஆதி

கண்ணிகள்

38 குறத்திமங்கையுஞ் சுரத்தி கன்னியுமே
கொண்டாடி முத்தங்
கொடுத்தணையு முல்லாசக் கண்ணியனே புவி
கூறுனற்றுதிசேருந் திருச்செந்தூரிலுற்ற
சிங்காரக் கந்தனே
கும்பனுக்குபதேசித்த முருகா
விண்ணோர் பணியும்
கோமனை காமனின் மருகா
உரத்தமயிலின் வரத்தகுந்தவனே
பருவச்சந்த
உருவமுற்ற கிருபைச் சண்முகனே
அருளூட்டியே வினையோட்டியே சுகம்
நீட்டியே கலைகூட்டியே யருள்
உற்றநற்கலை முற்றுவித்தகனே சிங்காரச்
சதங்கை யொலிக்கநடிக்கும் வலிப்பரன்மகனே

இடுக்கமுற்றிலுங் கெடுக்கும்
வல்லவனே துதிக்குமவர்க்கு
இகபரசுகங்கொடுக்கும் நல்லவனே
எதும்
ஈடிலது பொன்னுடை ரிட்டன
மோடுபடைக்கி நீடுதலைவ
னென்றெழுந்த வுல்லாச வற்புதனே
பரிமளமிகு
ஏரிலகுசெந்தாமரைப் பதனே
படிக்குளெவரும் படிக்குமந்திரனே
உகாரதண்ட
பாணிசெங்கை காணுஞ் சுந்தரனே
திருப்
பாமணங்கமழ் சாமியே மிக
நேமமுற்றிய ராமனுக்கருள்
ட[illegible]து தங்கவேலவா
அன்பாக மூவர்
பா[illegible]த்து மெய்க்கும் சீர்த்திமேலவா

வன்ன சாட்சி என்ற மெட்டு

பல்லவி

39 மயிலோனே மாகதவிகசித மயி

மதுரக்கனி வுறு சதுரக்கவிபுரி மயி

வரதக்குருபர சரவண சுரதப் பரிமள கீர்த்தன மயி

வானவராசிகள் கூறும் ஞானமகாமண மூறும் மயி
வானவற்குறிய சேனையிற்பெரிய
தானவித்தக வினோத சித்திர மயி

அநுபல்லவி

குயிலிசைகுஞ்சரி குறமகள் பாகா
குருபரதேசிக ஞான விவேகா
உயிரினம் யாவுமே யோது விசாகா
உசித மாட்சி உண்மை காட்சி
யொளிரு நீட்சி மயி

துயரறு தினகர சுடரொளி வேலா
சுரிதிகடிகழ்வுறு முகதிருக்கோலா
நயமுடனடியவர் புகழும் விசாலா
நவசிங்காரா நயகெம்பீரா
நறுபொற்றூரா மயி

ஜெயமிகு சம்பிரதீர குமாரா
திசைமறை புகழுறுசீர்த்தி கெம்பீரா
நயமுடன் ராமனுக்குதவு விஸ்தாரா
நவசங்கீதா நளினபாதா
நவில் வினோதா மயி

## வாசிமலைப்பெருமாள் கோவில் அலங்காரம்

சதாதுதிக்க மதுரையைப்போல் என்ற மெட்டு
இராகம் தேசிகம் தாளம்—ரூபகம்

பல்லவி

40 மகாவிசேஷந்திகழும் வாசிமலையிலாநந்தம்
வந்தவர்சிந்தை கனிந்து மகிழ்ந்திடும் ம

வந்தமுக்கனிச்சாலை கந்தக தம்பச்சோலை ம
மண்டுமக்கி னிச்சட்டியை யண்டிக்
கையிற்றூக்கி
கொண்ட கூர்மைப்பாத
குறட்டிலேறி வந்தார் ம

அநுபல்லவி

மாமத்தளம் வாரிடு நேரொலி
மீபித்திகை சாலவுமே மலி
வம்புச்சங்குகள் பம் பம் பம்பென
தம்புறு வீணைகள் கும் கும் கும்மென
மதுரச்சங்கித காவியம்
புதுரஞ்சிதமொளி யோவியம்

மாமணங் கமழ்ந்த மிக
பாமணம் பொருந்து சுக

வருநாரதர் வடநூலன்
பராசன் திரிநூலன்

வாசகமாமறை யாதி
பேசிய தொனிப்பிரக்யாதி

வருக்கைப் பலகனி மதுமழையருவி
பெருக்கக்காணு நற்கிரி தனினிரவி

மருமலர்பரிமளம் விரிகமழுயரும்
மகாதவயோகிகள் வாசம்
சுகாசுப சேம விசேஷம் ம

தொகையறா

மாயன் திருக்கோவிற் சூடவிசேஷப் புகை
மாமுகிலெனச்சிறக்கும்
நேயமிகுந்தே ஜெகத்தோர் செயுந்துதி
நெடுவாரிதனை நிகர்க்கும்

பாட்டு

நிகழ்த்தும் பாவலர்கள் முத்தமிழ் விளக்கம்
வகுத்துப்பாடுமிசைத் திருப்புகழ் முழக்கம் ம

மந்திரசந்த முகுந்தா தந்திர நந்தகோவிந்தா

மரகதமாமய ரூபா
உரகமிசைவரு பூபா

வாமா சேமா காமா பூமா நேமா ராமா

மங்கள மிங்கிதனன்கு விளங்கிய
சங்கிதரங்க வரங்க சுவாமியே

மதுரக்கிருபை கடாட்சி
சதுரச்சுருதிகள் சூட்சி

வாகா யோகா யூகா

மதிக்கும்சத்து சித்தா
துதிக்கு முத்து கத்தா

மந்திர அந்தரர் சுந்தரமேளம்
திந்தித்தரிகிட திரிகிட தோமென
வந்தித்தே சிந்தை செய்யும்

வரதமுத்த முகா பரிமளத்துளவா
வா வா தேவா காவா
யெனச்சொல்

மணங்கமழ் ராமன் செந்தமிழ்
குணங்கொண்டு பாடுவர் திருப்புகழ் ம

தாதாபாய் நௌரோஜி என்ற மெட்டு

இராகம் தேசிகதோடி தாளம்—சாப்பு

பல்லவி

41 வேலோனே ஓங்கார வேலோனே
வேதா மந்திர கீதா சுந்தர வே

அநுபல்லவி

கோலாகலக்குகனே குஞ்சரியின் சுகனே
கோதிலாத செம்பாதா மலரைப்
போது மறவா நீதியருளும் வே

தொகையறு

குடைசேவற் கொடிகொண்டு
சுரர்சேனைக் குதவிய குருபராகொற்ற நீதா
நடிகேகையா சுபகுமரா குகா புவி
ரட்சகா வள்ளி நாதா

பாட்டு

நாராயணன் மருகா
நற்குணத் திருமுருகா
நருமணமிகுந்திலகு செந்தமி
ழருமை ராமனுக் குதவியாகிய வே

## மாவூற்று வேலவர் கோவில் அலங்காரம்

காட்சிகண் காட்சியே என்ற மெட்டு

இராகம் இந்துஸ்தான் பியாக் தாளம்-ஆதி

பல்லவி

42 பார்த்தா லானந்தமே பகருமா வூற்றதனை பா

அநுபல்லவி

பூத்தார் கடம்பணிந்த புண்ணியவேலன் பதியை பா

பரிதிச்சுடர்க னகச்சிகரம்
திருசித்திரமதிவளர் கோவிலை பா

படரும் பொன்னொளி உன்னிதக் காட்சி
னிடதப்புதுமைக் கொடிமர நீட்சி பா

பருவப்பனிமலர் மதுகற்பூரம்
அருமைப் பரிமள மிகுவிஸ்தாரம் பா

படர்ந்தகற்பூரப் புகையது
சிறந்தனன் மேகத் துறைவது பா

பளிங்குமண்டப மிலங்கு சந்தனக்
குழம்பு குங்குமம் விளங்குமாமணம் பா

பரிமள குமரா பாலா கோலா பரா பரா குரு
பாமணமேனிப் பரங்கிரிக் குமாரண்டி
விசேஷ பண்டிதத்திரு பண்டாரத்துரை
பத்திரமயிலா சித்திர வொயிலா
பரைமகனே யெனப்பாடிக் கொண்டாடிக்
காவடி கோடி கோடி யாய்வருவன பா

சரணங்கள்

பத்திக்கறங்கு முளவொடு முரசம்
யெத்தனைலக்ஷ மெனினும் விசேஷம்
பரிவுற்றண்ட பித்திகை னிரவி
திரமுற்றெத்திசை முற்றும் பரவி

படிகுவடது கிடு கிடு வென
இடிபயமுற நெடுதொனி பெறு
பண்மையை னன்றுய்ப்பார்த்து
விண்ணவரின் பங்கோர்த்துப்

பாடிக்கூத்தாடிப் புகழ் னீடிக்
கொண்டாடுஞ்சீர் பா

பாரிற்றிக ழதிகார தீரன் கருப்பண
சாமி பாதச்சேவைசெய் காவடி
ஒதுவசங்க மதனை பா

பத்தியுற விளங்கும் பரிமளச்சோலை
பலகனிதேங்குமா பாங்குறு சாலை
சப்தரிசி யுரைப்பர் சதுர்மறை நூலை
சரவணகுருபர சாமியின் செயலை பா

பணைத்த சிகரக்கிரி மது முக்கனி
மணத்த மதுரச்சார விரைப்பன பா

பத்திர முத்தமிழ் வித்வ மயாதி
னித்திய மங்கள கத்தனி யாதி

பரிதிச்சுட ருருதிப்பெரு
சுருதிப்பொருளரு ளானவை பா

பாரினுள்ளோர்கள் துதி கோஷ்டம் அவை
பகருந்திசை முகடி னீட்டம் அணி
நாரியர் நடிப்பரிதேஷ்டம் திரு
நாரதர் சங்கித தேட்டம்

நலமிகு விசேஷம்
நறுமலரின் வாசம்
நவமணிப்பிர காசம்
நவில்குக னுல்லாசம் பா

பரமனின் ரகசியப் பழமறை சூட்சி
பசியமயிலின் மிசையுறைதரு மாட்சி
திருகுண ராமனின் சேவிதக்காட்சி
சிவமய முருகவேல் திருவா சாட்சியை பா

இராகம் தோடி தாளம்-சாப்பு

## பல்லவி

திருவாசக முருகனைத் துதிமனமே நிதம் தி

திருசித்திர புவனப்பதி
வருபித்திகை யெவருந்துதி தி

## அநுபல்லவி

சித்திரப்பெரு ரத்தினச்சிகி
யுற்றப்பொருள் முத்துச்சுக தி

தேசமெங்கினும் விசேஷ மங்கள
விலாச புங்ககவி ராஜ சிங்கனை

திரிபுரமதையதி விரைவினி லெரியிடு
திரனுறு பரமனின் றிருமகனெனவரு
திவ்ய ஞானபோதன் மிகு
செவ்வையான கீதன்

சிவமயாகதி நவநயா நிதி
சேமக்குமரனை ஜெயமிகு வீரனை
சேவலாழி தரை காவலாழி மறை
தேடலான பொருள்
பாடுதற்கு அருள்

திகழ்சற்குருபர விமலக்கடவுளை
விகசித்திரமொடு மகிமைத் துதிபுரி

சேமகாவிய ராமசாமிதன்
செந்தமிழ்த்தொடை
விந்தையாயணி
கந்தநாதனை சந்த பூசனை தி

கந்தமலிபூங்கடம்பக் கந்தவேல் என்ற மெட்டு.

பல்லவி

மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம்

அநுபல்லவி

ஐங்கரற்குஞ் சங்கரற்கும்
ஆதிரகு ராமருக்கும்
தங்கவடி வேலவற்கும்
தையல்வள்ளி குஞ்சரிக்கும் ம

புங்கமறை வேதியற்கும்
பூவிலுறை வாணியற்கும்
மங்கைசிவ காமியம்மை
வாசமிகு லட்சிமிக்கும் ம

புங்கதிரை பவ்வமுதைப்
பொருந்தும் நற்கீதமிவை
இங்கிதமாய்ச் சொல்பவர்க்கும்
இன்பமொடு கேட்பவர்க்கும் ம

துங்கமிகு செட்டிநகர்
சுத்தமிகு ராமனுக்கும்
யெங்கும்புகழ் வாசிமலை
யெம்பெருமான் பூசிதற்கும் ம

ஜெய சுபமங்களம்!

௨

## கணேசர் துதி.

நேரிசை வெண்பா.

தேவரெவருந் திருமால யனும்
ஆவலுறவந் தமர்கின்ற—காவனஞ்சூழ்
முத்தமுகுமா ஷற்று மூர்த்திமேற்பாட வருள்
சித்திக்கணபதியே செய்.

## ஸ்ரீ முருகக்கடவுளர் மீது போற்றி மாலை.

சீருலவு கற்பூரங் கமழ் சாம்பிராணி
செழுமலருமா கழபம் தேனின் வாடை
ஏருலவு மேவுலகு முழுதும் நாறும்
எழிலான பரங்கிரியி னிலங்குமூர்த்தி
நேருலவு கூவுகுரற் சேவலாழி
னிரந்தரனே திரிபுவன விசையங்கொண்ட
தாருலவு தடமார்பா வருகே வாவா
சரவண பவாநந்த சாமிநீயே.

முக்கனிகள் மதுமழையே பொழியுஞ்சோலை
முருகாருந் தண்டலைமா ஷற்றில் வாழும்
மிக்கசடாட் சரமுருகா விழங்குமாதி
விரிசுடரை னிகற்ததிரு மேனியானே
தக்கவனே யபிராமி தந்தபாலா
தரணிமுதற் றுதிமுழக்கந் தருந்தநீதி
சற்குருவே மனமகிழ்ந்தென் னருகே வாவா
சரவண பவாநந்த சாமிநீயே.

திருநடன மயில்கடவு குகனே மிக்க
திரல்பெறுகும் கதிர்வடிவே லைய்யா மெய்யா
தருபுவியா ராவலொடு வணங்கப் பெற்ற
சண்முகனே எண்ணறிய சம்பிரயோகா
பருவமொடு மணங்கமழுங் கமலப்பாதா
பாங்குயர்ந்த மெஞ்ஞானப் பழனியாண்டி
தருணமிதே யடியேன்முன் னைய்யா வாவா
சரவண பவாநந்த சாமிநீயே.

மதுமழைகள் பொழிகடப்ப மாலைவாகா
வரதகுரு மெஞ்ஞான வடிவேலைய்யா
புதுமை பெருந் திரிலோகம் புகழப்பெற்ற
புண்ணியனே னன்மறையின் பொருளே யோகா
கதமலிபூங் குழல்வள்ளி மருவுமின்பக்
கட்டழகா ரத்தினமே கருணைக்கந்தா
ததியிதுவே மனமகிழ்ந்தென் னருகேவாவா
சரவண பவாநந்த சாமிநீயே.

வருசிகர கோபுரத்தி னன்குபக்கம்
மறைகளும் னற்றிரிநூலு மணக்கப்பெற்ற
திருமதுரை யலங்காரச் சுந்தரேசன்
செல்வமணி ரத்தினமே தினகல்யாண
முறுபருவ மோராறு முகனே நல்ல
வோவியனே விருதுகவிக் காசேமுத்தி
தருமினிய தற்பரமே கனிந்துவாவா
சரவண பவாநந்த சாமிநீயே.

அம்புவியி லரம்பொருளு மழகாய்நீண்ட
அகண்டமுத லெவ்வுயிற்குங் கிருபையானே
நம்புமுயர் கும்பமுனிக் குபதேசித்த
நாதாந்த மந்திர குமரேசா வாசா
வம்புலவு இளரவியிற் சிறந்தமேனி
வடிவான சண்முகனே மதுரகீத்
சம்பிரனே இன்பமொடித்தியே வாவா
சரவண பவாநந்த சாமிநீயே.

கோலமயில் நவ்வியிலும் புதுவிநோதை
கோமளமா வாரணங்கு வள்ளிகையால்
சீலமுடன் றேன்வதிந்த மாவையுண்ட
செம்பவளக் கனிவாயா திருமெஞ்ஞான
பாலகுரு நாதமணிப் பழனியாண்டி
பத்திசெய்வார் சித்தமதிற் பரிவுகூர்ந்து
சாலதிருக் கருணையுற்ற முருகா வாவா
சரவண பவாநந்த சாமிநீயே.

வாசமல ரெவ்வகையும் வகையாய்த்தூவி
மருக்கமழு முக்கனியுந் தேனும் பாலும்
பேசினிய சர்க்கரையுந் தேங்காய்வைத்து
பேரின்ப மாய்ப்படைத்து பணிந்தேன் தேவா
கோசிகம்னற் பரிமளிக்கு முகனேவள்ளி
கொஞ்சிமிகச் சேர்ந்தணைந்த குமரவேலா
தாசருட விருதயனே யருகேவாவா
சரவண பவாநந்த சாமிநீயே.

விரிமறைகள் புகழ்சரண விமலா சம்பிர
வித்தகனே சத்திவடி வேலா கோலா
அரிதனது மருமகனே கிருபையாழி
அம்புவி யெலாம்புகழ் விநோதபோதா
கரிமுகமா கணபதிதன் கூடவந்த
கட்டழகு முத்தையா கனவிசேஷா
தரிகிடத்தோ மெனநடித்தோன் மகனேவாவா
சரவண பவாநந்த சாமிநீயே.

மங்களஞ்சேர் செட்டிநகர் தனிலே மேவும்
மதுரகலை ராமையா வணங்கும் பாதா
சங்கரற்கு மறையதனைப் படிக்கவைத்த
சற்குருவே மிக்கபுகழ் தகுந்தசாமி
இங்கிதமா சங்கிதனே யெவரும் போற்றும்
எழிலான குமரேசா வினியபூசா
தங்கநிற மேனியனே கிருபை தாதா
சரவண பவாநந்த சாமிநீயே.

சுப மங்களம்.

முற்றுப்பெற்றது.